மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், சென்னை – 600 006.

ந.க.எண்: 2411/எஃப்2/2021 நாள். 20.12.2024

******

பொருள்: எண்ணும் எழுத்தும் பயிற்சி –2024- 2025 ஆம் கல்வியாண்டு - 1 முதல் 5 ஆம் வகுப்பு – மூன்றாம் பருவத்திற்கான ஒன்றிய அளவிலான பயிற்சி கனமழையின் காரணமாக 21.01.2025 முதல் 24.01.2025 வரையிலான நாட்களில் நடத்துவது சார்ந்து திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்துதல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை எண்.147, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள். 22.10.2021
2. அரசாணை எண் 129, பள்ளிக் கல்வித் (ERT) துறை, நாள். 18.07.2023
3. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்:2411/எஃப்2/2021 நாள். 13.11.2024

------

பார்வை(3) ல் காணும் செயல்முறைகளில், 1 முதல் 5 ஆம் வகுப்பிற்கு ஒன்றிய அளவிலான எண்ணும் எழுத்தும் சார்ந்த பயிற்சி 06.01.2025 முதல் 09.01.2025 வரை நான்கு நாட்கள் நடத்திடுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களிடம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் ஆகிய மாவட்டங்களில் கனமழையின் காரணத்தால், இரண்டாம் பருவத்திற்கான தொகுத்தறி மதிப்பீடு 06.01.2025 முதல் 10.01.2025 முடிய மாற்றியமைக்கப்பட்டுள்ளதால் ஏற்கனவே இத்தேதிகளில் பயிற்சி நடத்த குறிப்பிட்டிருந்த நிலையில், 21.01.2025 மற்றும் 22.01.2025 ஆகிய நாட்களில் 1 முதல் 3 ஆம் வகுப்பிற்கும், 23.01.2025 மற்றும் 24.01.2025 ஆகிய

நாட்களில் 4 மற்றும் 5 ஆம் வகுப்பிற்கும், ஒன்றிய அளவிலான எண்ணும் எழுத்தும் சார்ந்த ஆசிரியர்களுக்கான பயிற்சி நடத்திடுமாறு அறிவுறுத்தப்படுகிறது. இப்பயிற்சிக்கான திட்டமிடல் கூட்டத்தினை 1 முதல் 3 ஆம் வகுப்பிற்கு 20.01.2025 அன்றும், 4 மற்றும் 5 ஆம் வகுப்பிற்கு 21.01.2025 அன்றும் நடத்திடுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

இயக்குநர்

19.12.24

பெறுநர்
திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள்

நகல்
இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்ககம், சென்னை-06 அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.